தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

16.02.2013 A.M

## பயிர் பாதிப்புகளை முறையாக கணக்கிட வேண்டும்

கடலூர் மாவட்ட விவசாயிகள் நிவாரணம் பெற ஏதுவாக கிராமம் கிராமமாகச் சென்று பயிர் பாதிப்புகள் குறித்து கணக்கெடுப்பு மேற்கொள்ள வேண்டும் என சட்டப்பேரவை உறுப்பினர் கே.பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சிதம்பரத்தில் வியாழக்கிழமை அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தது: தமிழக அரசு பிறப்பித்துள்ள அராசணையில் டெல்டாவில் தற்கொலை செய்து கொண்ட விவசாயிகள் 9 பேருக்குத் தலா ரூ.3 லட்சம் வழங்கப்படுவதாக அறிவித்துள்ளது. ஆனால் தமிழகத்தில் மொத்தம் 19 பேர் இறந்துள்ளனர். அனைவருக்கும் இந்த நிவாரணத்தை வழங்க வேண்டும்.

கடலூர் மாவட்டத்தில் டெல்டா பகுதிகளில் 56,583 விவசாயிகள், 1,59,980 ஏக்கர் நிலத்துக்கு பயிர் காப்பீடு செய்துள்ளனர்.

மாவட்டத்தில் உள்ள வேளாண்துறை அதிகாரிகள் சரியாக கணக்கீடு செய்து அரசுக்கு வழங்கவில்லை. ஏற்கனவே அதிகாரிகள் செய்த தவறான நடவடிக்கையால் ஸ்ரீமுஷ்ணம் பிர்காவில் உள்ள 26 வருவாய் கிராமங்களில் பயிர் காப்பீடு கிடைக்காமல் போய் விட்டது.

தற்போது 1,59,980 ஏக்கரில் 36 ஆயிரம் ஏக்கருக்குத் தான் பயிர் காப்பீடு விண்ணப்பம் சென்றுள்ளது. இதனால் கடலூர் மாவட்டத்தில் கணிசமான விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்காமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே வேளாண்துறை, காப்பீடு துறை, புள்ளியியல்துறை ஆகிய 3 துறைகளை கொண்டு கடலூர் மாவட்ட ஆட்சியர் கிராமம், கிராமமாக முறையாகக் கணக்கீடு செய்து அரசுக்கு புள்ளி விபரத்தை அனுப்பி நிவாரணம் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## கோழிப்பண்ணை விவசாயிகளுக்கு ரூ.89 லட்சம் நிவாரணம்

விழுப்புரம் மாவட்டத்தில் தானே புயலால் பாதிக்கப்பட்ட 318 கோழிப்பண்ணை விவசாயிகளுக்கு நிவாரண நிதியாக ரூ.89 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஆட்சியர் வா. சம்பத் தெரிவித்தார்.

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் வா. சம்பத் தலைமை வகித்தார். இதில் பங்கேற்ற விவசாயிகள், சாத்தனூர் அணையிலிருந்து பாசனத்துக்குக் கூடுதலாகத் தண்ணீர் திறக்க வேண்டும்.

பாசனக் கால்வாய், ஏரிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, மழைநீரை சேமிக்கும் வகையில் ஆழப்படுத்த வேண்டும். மாவட்டத்தில் நெல் அறுவடை நடைபெற்று வருவதால், கொள்முதல் நிலையம் தொடங்க வேண்டும். விவசாய மின் இணைப்புகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என வலியுறுத்தினர். இதற்கு பதிலளித்து ஆட்சியர் பேசியது:

தானே புயலால் பாதிக்கப்பட்ட கறிகோழிப்பண்ணை விவசாயிகள் 318 பேருக்கு நிவாரண நிதியாக ரூ.88,95,725 ஒதுக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்படுள்ள விவசாயிகளுக்கு கால்நடைப் பராமரிப்புத்துறையின் மூலம் நிதி அளிக்கப்படும்.

தற்போது நெல் அறுவடை நடைபெற்று வரும் நிலையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் நேரடி கொள்முதல் நிலையம் விரைவில் திறக்கப்படும் என்றார்.

இதில், வேளாண்மைத் துறை இணை இயக்குநர் சேகர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்) ராஜசேகரன், தமிழ்நாடு மின்வாரிய கண்காணிப்புப் பொறியாளர் மா. அசோகன்,

கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ஆர். பாலகிருஷ்ணன், கள்ளக்குறிச்சி மின்வாரியப் கண்காணிப்பு பொறியாளர் அருட்பெரும்ஜோதி, நபார்டு வங்கி பொதுமேலாளர் என்.விக்ரமன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## விவசாயிகளுக்கு நிவாரணம்:முதல்வருக்கு பாராட்டு

வறட்சி காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தமிழக அரசின் சார்பில் ரூபாய் 15 ஆயிரம் நிவாரணம் அறிவித்த முதல்வருக்கு பாராட்டு தெரிவித்து முஸ்லீம் உரிமை பாதுகாப்புக் கழகத்தின் திண்டிவனம் நகர செயல்வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இச்சங்கத்தின் செயல்வீரர் கூட்டம், வியாழக்கிழமை திண்டிவனத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு நகர தலைவர் எம்.ஏ.முகமது இக்பால் தலைமை தாங்கினார். மாவட்ட தலைவர்

எஸ்.ஏ.ஷேக்ஜான் பாஷா முன்னிலை வகித்தார். நகர பொருளர் ஏ.தீன் வரவேற்றார். மாநில பொதுச் செயலர் ஆலி ஜனாப் இடிமுரசு இஸ்மாயில் சிறப்புரை ஆற்றினார்.

கூட்டத்தில் வறட்சி காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தமிழக அரசின் சார்பில் ரூ.15 ஆயிரம் நிவாரணம் அறிவித்த முதல்வருக்கு பாராட்டு தெரிவிப்பது, அப்சல்குருவை விதிமுறைகளை மீறி ரகசியமாக தூக்கிலிட்ட மத்திய அரசை வன்மையாக கண்டிப்பது,

சமாஜ்வாதா எக்ஸ்பிரஸ் மற்றும் மாலேகான் குண்டுவெடிப்புகளில் ஆர்.எஸ்.எஸ் அமைப்பினருக்கு மத்திய உள்துறை செயலர் ஆர்.கே.சிங் கூறி உள்ள நிலையில், நாடு முழுவதும் அந்த அமைப்பை தடை செய்ய மத்திய அரசை கேட்டுக்கொள்வது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இறுதியில் நகர செயலர் முஸ்தபா நன்றி கூறினார்.

## மேட்டூர் அணையின் நீர்வரத்து 1,614 கன அடி

சேலம் மாவட்டத்தில் உள்ள மேட்டூர் அணைக்கு இன்று காலை நிலவரப்படி வினாடிக்கு 1,614 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது.

மேட்டூர் அணையில் தற்போது 29.8 அடிக்கு தண்ணீர் உள்ளது.அதன் முழு நீர் கொள்ளளவு 120 அடியாகும்.

கிருஷ்ணராஜ சாகர் அணையில் இருந்து 2 ஆயிரம் கன அடி நீரை கர்நாடகம் விடுவித்து 7 நாட்கள் ஆகும் நிலையில், இன்று காலை மேட்டூர் அணைக்கு காவிரியில் 1,614 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து வினாடிக்கு 480 கன அடி நீர் திறந்துவிடப்பட்டு வருகிறது.

## தென்கிழக்கு அரபிக் கடலில் காற்றழுத்தத் தாழ்வு நிலை: வட தமிழகத்தில் மழை தொடரும்

தென்கிழக்கு அரபிக் கடலில் நிலை கொண்டுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக நாளை (பிப்.17) வட தமிழகத்தில் மழை நீடிக்கும் என வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

சில நாள்களுக்கு முன்பு அரபிக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை, லட்சத்தீவுகளுக்கும் ராஜஸ்தானுக்கும் இடையே நீடித்திருந்தது. அது தற்போது தென் கிழக்கு அரபிக் கடல் பகுதியில் நிலை கொண்டுள்ளது.குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை வலுவிழந்து வந்தாலும், தமிழகத்தில் இன்னும் 2 நாள்களுக்கு மழை நீடிக்கும் என

அறிவிக்கப்பட்டுள்ளது.வேலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், ஈரோடு, நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், கரூர், திருச்சி, அரியலூர், பெரம்பலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது. கடலோர மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் பலத்த மழை பெய்யலாம். தேனி, மதுரை, விருதுநகர், சிவகங்கை உள்பட மாநிலத்தின் பிற மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்யக்கூடும்.

சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு கலப்பட பால் விநியோகம்

மதுரை மாவட்டத்தில் பல்வேறு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு கலப்படப் பால் விநியோகம் செய்யப்படுவதாகப் புகார் தெரிவித்தும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றிய (ஆவின்) அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமல் உள்ளனர் என்று விவசாயிகள் குற்றஞ்சாட்டினர்.

மதுரை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அன்சுல் மிஸ்ரா தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் கோரிக்கைகளை விளக்கி விவசாயிகள் பேசியது:

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்க ஆய்வுப் பணிகளை விரைவில் மேற்கொள்ள மாவட்ட நிர்வாகம் முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

கரும்பு விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம், நெல் நடவு செய்து சாகுபடி ஈட்ட முடியாத விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம், நடவு செய்ய முடியாமல் போனவர்களுக்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம், தரிசாக விட்டவர்களுக்கு ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம், விவசாயத் தொழிலாளர்களுக்கு குடும்பத்துக்கு ரூ.10 ஆயிரம் வழங்க வேண்டும்.

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துக்கான பணி நாள்கள் 150 நாள்களாக உயர்த்தப்பட்டிருப்பது வரவேற்புக்குரியது. அதேநேரம், சிறு குறு விவசாயிகள், எஸ்சி, எஸ்டி விவசாயிகளின் நிலங்களின் நிலம் மேம்பாட்டுப் பணிகள், பண்ணைக் குட்டைகள், கசிவுநீர்க் குட்டைகள் அமைப்பது போன்ற பணிகளை, வேலை உறுதித் திட்டத்தில் மேற்கொள்ளலாம் என அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவை அரசு செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். கண்மாய்கள், நீர்வரத்துக் கால்வாய்களைத் தூர்வாரி, கரைகளைப் பலப்படுத்தும் பணிகளைத் துரிதப்படுத்த வேண்டும்.

விவசாயத்தைத் தொடர்ந்து பால் உற்பத்தியாளர்கள் மிகவும் சிரமத்துக்கு ஆளாகின்றனர். தீவனங்கள் விலை அதிகரித்து வரும் சூழலில், பால் உற்பத்தியாளர்களுக்கு ஆவின் நிறுவனம் வழங்க வேண்டிய ஊக்கத் தொகை, மானியம் உள்ளிட்டவை தாமதமாகி வருகிறது. மதுரை பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் லாபம் ஈட்டியபோதும், உற்பத்தியாளர்களுக்கான ஊக்கத் தொகை வழங்குவது தாமதம் செய்யப்படுகிறது.

பால் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்படும் பாலில் கலப்படம் செய்யப்படுகிறது. இது குறித்து ஆவின் அதிகாரிகளுக்குப் புகார் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றனர்.

இதைத் தொடர்ந்து விவசாயிகளின் புகார்களுக்குப் பதில் அளித்துப் பேசிய ஆட்சியர், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வுக் குழு இம்மாத இறுதிக்குள் நேரில் பார்வையிடும். ஆய்வுக் குழு பார்வையிடும் பகுதிகள் முன்கூட்டியே விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்படும்.

அப்போது விவசாயிகள், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் தங்களது கருத்துக்களை ஆய்வுக் குழுவிடம் தெரிவிக்கலாம். பாதிக்கப்பட்ட விவசாயிகள் உரிய நிவாரணம் பெற்றுத்தர மாவட்ட நிர்வாகம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்றார்.

பால் கலப்படம் தொடர்பான புகாருக்குப் பதில் அளித்த ஆவின் அதிகாரி, கொள்முதல் செய்யப்படும் ஒவ்வொரு கேனில் உள்ள பால் சோதனைக்குப் பிறகே எடுத்துக் கொள்ளப்படுகிறது. கலப்படம் கண்டறியப்பட்டால் அந்த கேனில் இருக்கும் பால் கொள்முதல் செய்யப்படுவதில்லை என்றார்.

ஆனால், கலப்படம் என்று தெரிந்தும் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்காதது ஏன்? என்று விவசாயிகள் கேள்வி எழுப்பினர். அதற்கு ஆவின் தரப்பில் அளிக்கப்பட்ட பதிலை விவசாயிகள் ஏற்கவில்லை.

பெருமாள்பட்டி என்ற இடத்தில் கலப்படம் குறித்து விவசாயிகள் புகாரைத்தொடர்ந்து அங்கு ஆய்வு செய்த ஆவின் அதிகாரிகள், அந்த பாலை கீழே கொட்டிவிட்டு வந்தனர். ஆனால், கலப்படம் செய்தவர்கள் மீது எந்த நடவடிக்கையும் இல்லை என்றனர்.

இதைத்தொடர்ந்து பேசிய ஆட்சியர் அன்சுல் மிஸ்ரா, பால் கலப்படம் தொடர்பாக நேரடியாக ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

## பவானிசாகர் நீர்மட்டம்

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 33.88 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,523 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கனஅடி நீரும், வாய்க்காலில் 1,300 கனஅடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 1.59 டி.எம்.சி.

## வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னைகளுக்கு இழப்பீடு

வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னைகளுக்கு உரிய இழப்பீடு வழங்கப்படும் என ஆட்சியர் பொ. சங்கர் உறுதியளித்தார்.

வேலூர் ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு ஆட்சியர் பொ. சங்கர் தலைமை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவலர் சுந்தரவல்லி, கூட்டுறவு இணைப் பதிவாளர் வெங்கடேசன், வேளாண் இணை இயக்குநர் தமிழ்ச்செல்வன் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் கூறியது: சோளிங்கர் ஆலாம்பட்டறையில் பொதுப்பணித் துறைக்கு சொந்தமான கால்வாய் ஆக்கிமிக்கப்பட்டுள்ளது. வாணியம்பாடி, ஆம்பூர் பகுதிகளில் அதிகாரிகளுக்குத் தெரியாமல் இரவு நேரங்களில் தோல்தொழிற்சாலை கழிவுநீர் ஆற்றில் விடப்படுகிறது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் பாதிக்கப்பட்டு கிணறுகளில் உள்ள நீர் விவசாயத்துக்கு பயன்படுத்த முடியாத நிலை உள்ளது.

வேலூர் மாவட்டத்தில் தொடர்ந்து 15 ஆண்டுகளாக நிலவும் வறட்சியால் தென்னை மரங்கள் காய்ந்து விட்டன. இதை ஆய்வு செய்து உரிய இழப்பீடு வழங்க வேண்டும். தென்னைகளுக்கு சொட்டுநீர் பாசனக் கருவிகளை மானியத்தில் வழங்க வேண்டும் என்றனர்.

இதையடுத்து ஆட்சியர் பேசியது: ஆக்கிரமிப்பு தொடர்பாக நில அளவை செய்யப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். விதிமுறைகளை மீறிய தோல் தொழிற்சாலைகள் ஏற்கெனவே மூடப்பட்டுள்ளன. தொடர்ந்து ஆய்வு செய்து விதிமுறைகளை மீறும் தோல் தொழிற்சாலைகளை மூட நடவடிக்கை எடுக்கப்படும்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களை அதிகாரிகள் ஆய்வு செய்து இழப்பீடு வழங்குவார்கள். சொட்டுநீர் பாசனத்துக்கு முறைப்படி விண்ணப்பம் செய்ய வேண்டும் என்றார் அவர்.

## தரமற்ற நெல் களை எடுக்கும் கருவித

திருவண்ணாமலை மாவட்டத்தில் தரமற்ற நெல் களை எடுக்கும் கருவி விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக, குறைதீர் கூட்டத்தில் ஆட்சியரிடம் விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு, மாவட்ட ஆட்சியர் விஜய் பிங்ளே தலைமை வகித்தார். இக் கூட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான விவசாயிகள், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள், அரசுத் துறை அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் பேசிய விவசாயிகள் பலர், திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள சாத்தனூர் அணை, மிருகண்டா நதி அணை, குப்பநத்தம் அணை, செண்பகத்தோப்பு அணைகளில் பூச்செடிகளை நட்டு அழகுப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். இதையடுத்து, அணைகளில் பூச்செடிகளை நட்டு அழகுப்படுத்துமாறு தோட்டக்கலைத்துறை அதிகாரிகளுக்கு ஆட்சியர் விஜய் பிங்ளே உத்தரவிட்டார்.

தரமற்ற களை எடுக்கும் கருவி: திருவண்ணாமலை மாவட்டத்தில் செம்மை நெல் சாகுபடிக்கு வழங்கப்படும் களை எடுக்கும் கருவிகள் தரமற்றதாக உள்ளன. இவற்றுக்குப் பதிலாக நவீன களை எடுக்கும் கருவிகள் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

இதற்குப் பதிலளித்த வேளாண் இணை இயக்குநர், திருவண்ணாமலை மாவட்டத்தில் 2 நிறுவனங்கள் மூலம் களை எடுக்கும் கருவிகள் வழங்கப்பட்டன. இவற்றில் ஒரு நிறுவனம் மூலம் வழங்கப்பட்ட களை எடுக்கும் கருவிகளில் சில குறைபாடுகள் இருப்பது குறித்து வேளாண்மைத்துறை ஆணையருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் தரமான கருவிகள் வழங்கப்படும் என்றார்.

இதையடுத்து, விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட அனைத்து களை எடுக்கும் கருவிகளையும் வேளாண்மைத்துறை களப்பணியாளர்கள் மூலம் ஆய்வு செய்து, அவற்றின் தரம் குறித்த அறிக்கையை வழங்குமாறு வேளாண்மை இணை இயக்குநருக்கு ஆட்சியர் விஜய் பிங்ளே உத்தரவிட்டார்.

விஷக்கடிக்கு மருந்து: மாவட்டத்தின் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் விஷக்கடிக்கான மருந்து இருப்பு வைக்க வேண்டும் என்றும், விவசாய நிலம் மற்றும் சாலையோரங்களில் தாழ்வாக உள்ள மின் வயர்களை உயர்த்தி கட்ட வேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து, அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் விஷக்கடிக்கான மருத்துகளை இருப்பு வைக்கவும், தாழ்வான மின்கம்பிகளை உயர்த்திக் கட்டவும் அதிகாரிகளுக்கு ஆட்சியர் உத்தரவிட்டார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ச.வளர்மதி, வேளாண்மைத்துறை இணை இயக்குநர் சக்கரவர்த்தி, ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஜி.சந்திரசேகர், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் சா.திருகுண அய்யப்பதுரை உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

### விவசாய கடன்களை ரத்து செய்யக் கோரிக்கை

தமிழகத்தில் விவசாயிகள் பெற்ற கடன்களை மத்திய அரசு ரத்து செய்ய வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு காங்கிரஸ் விவசாயப் பிரிவு மாநில துணைத் தலைவர் புலியூர் நாகராஜன் மத்திய அரசுக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனு விவரம்:

தமிழகத்தில் பருவமழை பொய்த்ததாலும், காவிரியில் பாசனத்துக்கு கர்நாடக அரசு திட்டமிட்டு தண்ணீர் தர மறுத்ததாலும் காவிரி டெல்டா உள்ளிட்ட தமிழகம் முழுவதும் பயிர்கள் காய்ந்து வீணாகிவிட்டன.

காவிரி டெல்டா உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 19 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

கடந்த 2008-ம் ஆண்டு கடன் நிவாரணத் திட்டத்தின் மூலம் 5 ஏக்கர் வரையுள்ள விவசாயிகளுக்கு முழு கடன் தள்ளுபடியும், அதற்கு மேல் உள்ள விவசாயிகளுக்கு 25% தள்ளுபடியும் மத்திய அரசு வழங்கியது.

கடுமையான வறட்சி காரணமாக 2008-ம் ஆண்டைப் போலவே தற்போதும் விவசாயிகள் பெரும் இன்னலுக்கு ஆளாகியுள்ளனர். எனவே தமிழக விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு வங்கிகள் மூலம் வழங்கிய விவசாய கடன்கள் முழுவதையும் ரத்து செய்ய

நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலம் விவசாயிகளின் தற்கொலை சாவுகளை தடுக்க முடியும் என அவர் அந்த மனுவில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### 100% மானியத்தில் சொட்டுநீர்ப் பாசனம்

அரியலூர் மாவட்டத்தில் உள்ள சிறு, குறு விவசாயிகளுக்கு 100% மானியத்தில் சொட்டுநீர்ப் பாசனம் அமைத்துத் தரப்படும் என்றார் மாவட்ட ஆட்சியர் ப. செந்தில்குமார்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் வேளாண்மைத் துறை சார்பில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் 2011-12 -ம் ஆண்டு தமிழ்நாடு ஜயம்வாம் திட்டத்தின் கீழ் நடைபெற்ற மாநில அளவிலான மக்காச்சோள சாகுபடி பயிர் விளைச்சல் போட்டியில், மாநில அளவில் முதல் பரிசு பெற்ற உலகநாதனுக்கு ரூ. 7,500-க்கான காசோலை, மாநில அளவில் மூன்றாம் பரிசு பெற்ற பழனிவேலுக்கு ரூ. 2500-க்கான காசோலை, எண்ணெய் வித்து பெருக்குத் திட்டத்தின் கீழ் ஆண்டிமடம் வட்டாரத்தைச் சேர்ந்த சாமிதுரைக்கு ரூ. 6800 மதிப்பிலான விசைத்தெளிப்பான், விவசாயிகள் பூசமணிக்கு ரூ. 2,340 மதிப்பிலான கைத்தெளிப்பான், வெங்கடாசலபதிக்கு ரூ. 535 மதிப்பிலான களைக்கொல்லி வழங்கி மாவட்ட ஆட்சியர் பேசியது:

குறுவை பருவத்துக்கு ஏற்ற ஆடுதுறை 36, 45 ஆகிய விதைகளும், நன்செய் தரிசில் உளுந்து சாகுபடி செய்ய 4 டன் விதைகளும் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. மேலும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் தனியார் விற்பனை மையங்களில் யூரியா 750 மெ.டன், டி.ஏ.பி 451 மெ.டன், பொட்டாஷ் 400 மெ.டன் மற்றும் கலப்பு உரங்கள் 405 மெ.டன் இருப்பு உள்ளது. மாநில அரசு திட்டம் மூலம் ரூ. 132.04 லட்சம் நிதி பெறப்பட்டு ரூ. 90.50 லட்சமும், மத்திய அரசு திட்டம் மூலம் ரூ. 9.5 லட்சம் நிதி பெறப்பட்டு ரூ. 2.43 லட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளன. அரியலூர் மாவட்டத்தில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் மற்றும் நிலக்கடலை இயக்கத் திட்டத்தின் கீழ் உயிர் உரம், நுண்ணூட்ட உரம், களைக்கொல்லி, இனக்கவர்ச்சி பொறி, இயந்திரங்கள் ரூ. 31.91 லட்சம் மதிப்பில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

இவை அனைத்தும் 50 சதவீத மானியத்தில் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், தேசிய இயக்கம் மற்றும் நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தின் கீழ் 480 ஹெக்டேர் பரப்பளவில் செயல்படுத்தப்படவுள்ளது.

நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தின் கீழ், ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 43,816 மதிப்பில் சிறு, குறு விவசாயிகளுக்கு 100% மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்திலும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் மூலம் சொட்டுநீர்ப் பாசனம் அமைத்துத் தரப்படும் என்றார் அவர்.

கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குநர் குணசேகரன், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் (பொறுப்பு) சுப்பையா, வருவாய் கோட்டாட்சியர் கணபதி, விவசாயச் சங்கப் பிரதிநிதிகள் உலகநாதன், செங்கமுத்து, ஜெயசந்திரன், ராகவேந்திரன், பிச்சைபிள்ளை, அம்பேத்கர் வலியன், மணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## வேளாண் இயந்திரக் குழுவில் உறுப்பினராக விண்ணப்பிக்கலாம்

அரியலூர் மாவட்டத்தில் வேளாண் இயந்திரக் குழுவில் உறுப்பினராக 40 வயதுக்குள்பட்டோர் விண்ணப்பிக்கலாம் என்றார் மாவட்ட ஆட்சியர் ப. செந்தில்குமார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

வேளாண்மை பொறியியல் துறை மூலம் கிராமப்புற இளைஞர்கள், குறு மற்றும் சிறு விவசாயிகள் 15- 16 நபர்களை கொண்ட வேளாண் இயந்திரக்குழு அமைக்கப்பட உள்ளது.

இந்தக் குழுவானது 4 உப குழுவாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவுக்கும் அந்தந்தப் பகுதிகளில் நெல் பயிரிடும் பரப்பளவில் இயந்திரங்களைக் கொண்டு உழவுப்பணி, களை எடுக்கும் பணி, நாற்று நடும் பணிகளை மேற்கொள்ள வசதியாக பவர் டில்லர், நாற்று நடும் இயந்திரம், களை எடுக்கும் இயந்திரம் ஆகியவை 100 சதம் மானியத்தில் வழங்கப்பட்டு, இயந்திரங்களை இயக்கவும், பராமரிக்கவும், குழு உறுப்பினர்களுக்கு 10 நாள் பயிற்சி அளிக்கப்படும். சங்கங்களின் பதிவு சட்டப்படி பதிவு செய்யப்பட்டு, குழுவின் வரவு செலவினங்களை மேற்கொள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் சேமிப்புக் கணக்கு தொடங்கப்படும்.

இயந்திரங்களை குழுவின் உறுப்பினர்களே இயக்கி, அதன்மூலம் பெறப்படும் வாடகை தொகையை கணக்கில் செலுத்த வேண்டும். வாடகை வருவாயிலிருந்து இயந்திரங்கள் பராமரிப்பு, எரிபொருள் போன்ற செலவினங்கள் மேற்கொள்ளப்படும். மீதமுள்ள வருவாய் உறுப்பினர்களின் ஊதியம், சங்கத்தின் செயல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம். இதுதொடர்பாக, வேளாண்மை பொறியியல் துறையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

மேற்கண்ட நிபந்தனைகளுடன் அமைக்கப்படும் குழு உறுப்பினர்கள் 40 வயதுக்குள்பட்டு, குறைந்தபட்சம் 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்று, விவசாயப் பணியை மட்டுமே முழுநேரப் பணியாகக்

கொண்ட ஊரக இளைஞர்கள் குறு, சிறு விவசாயிகளாக இருக்க வேண்டும். உறுப்பினர்கள் நேர்காணல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

எனவே, குழுவில் உறுப்பினர்களாகி பணி செய்ய விருப்பம் உள்ளவர்கள் வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்ட சிறு, குறு விவசாயி அல்லது முழுநேர விவசாய தொழிலாளி சான்றுடன் பிப். 20-ம் தேதிக்குள் உதவி செயற்பொறியாளர் (வேளாண்மை பொறியியல் துறை), பண்டகசாலை வளாகம், ஜயங்கொண்டம் சாலை, அரியலூர் அலுவலகத்தில் திருமானூர், தா. பழூர் வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## வேளாண் வங்கியில் டெபாசிட் சேகரிப்பு முகாம்

பொன்னமராவதி கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியில் டெபாசிட் சேகரிப்பு முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

முகாமிற்கு கூட்டுறவு சங்க கள அலுவலர் சீனியப்பா தலைமை வகித்தார். நிலவள வங்கி மேலாளர் பா. பிரபாகரன் முன்னிலை வகித்தார். துணைப் பதிவாளர் சு. சதீஸ்குமார் வைப்புத்தொகை செலுத்தியவர்களுக்கு பத்திரங்களை வழங்கிப் பேசினார்.

முகாமில் வாடிக்கையாளர்களிடமிருந்து டெபாசிட் பெறப்பட்டது. தொடக்கக் கூட்டுறவு வங்கி செயலர்கள் சண்முகசுந்தரம், துரையரசன், பாலகிருஷ்ணன், மேற்பார்வையாளர் வி. பார்த்தசாரதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## மாவட்ட நிர்வாகம் தெளிவுபடுத்த விவசாயிகள் வலியுறுத்தல்

டெல்டா பகுதிகளுக்கு தமிழக முதல்வர் அறிவித்துள்ள சலுகைகள், புதுக்கோட்டை மாவட்ட காவிரி பாசனப் பகுதி விவசாயிகளுக்கும் கிடைக்குமா என்பது குறித்து மாவட்ட நிர்வாகம் தெளிவுபடுத்த வேண்டும் என புதுகை விவசாயிகள் வலியுறுத்தினர்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் செ. மனோகரன் தலைமையில் விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் பங்கேற்ற விவசாயிகள் பேசியது:

ஜி.எஸ். தனபதி: தமிழக அரசு சென்னை தவிர்த்த 31 மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவித்துள்ளது. ஆனால், டெல்டா பகுதிகளுக்கான நிவாரண அறிவிப்புகள் புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளுக்கு கிடைக்குமா என்பதும், பிற பகுதிகளில் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு எவ்வளவு நிவாரணம் கிடைக்கும் என்பதும் தெரியவில்லை. மாவட்ட நிர்வாகம் இந்தப் பிரச்னை

குறித்து அரசுக்கு பரிந்துரை செய்துள்ளதாகக் கூறப்படுகிறது. இதுகுறித்து அரசின் நிலை என்ன என்பதை மாவட்ட நிர்வாகம் தெளிவுபடுத்த வேண்டும்.

இதே கருத்தை விவசாயி மு. மாதவனும் தெரிவித்தார்.

சி. அப்பாவு பாலாண்டார்: மாவட்டத்தில் பயிர்கள் கருகிப்போனதால் தற்கொலை செய்து கொண்ட விவசாயிகள் 5 பேரில், அரசு அறிவித்த நிவாரண உதவிகள் எத்தனை பேருக்கு கிடைத்துள்ளது?

இதே கோரிக்கையை விவசாய சங்கப் பிரதிநிதிகள் எஸ். பொன்னுச்சாமி, எம். செபஸ்தியான், ராமதீர்த்தார், மணிவேல், ஏ. ஆசாத், எஸ். சங்கர், சா.வே. காமராசு உள்ளிட்டோர் வலியுறுத்தினர்.

அன்னவாசல் எஸ்.சி. சோமையா: அன்னவாசல் தொடக்க வேளாண் வங்கியில் விவசாயிகள் அடகு வைத்த நகைகள் திருட்டு போன விவகாரத்தில் விவசாயிகள் கடந்த 3 மாதங்களாக அலைக்கழிக்கப்படுகின்றனர்.

மணமேல்குடி ஆத்மநாதன்: கிராமங்களில் உள்ள பாசன ஏரிகள், குளங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும்.

கந்தர்வகோட்டை பெரியசாமி: கரும்பு, நெல் சாகுபடி விவசாயிகளுக்கு கூடுதலாக மானியம் அளிக்க வேண்டும்.

ஆட்சியர் செ. மனோகரன் விளக்கமளித்து பேசியது:

அன்னவாசல் வேளாண் கூட்டுறவு வங்கியில் அடகு நகைகள் திருட்டு போனது தொடர்பாகவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நகைகளோ அல்லது இழப்பீட்டுத் தொகையோ விரைவில் கிடைக்க கூட்டுறவுத் துறையினர் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். இனியும் காலம் தாழ்த்தக் கூடாது.

மாவட்டத்தில் தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளில் 2 பேருக்கு அரசு அறிவித்த நிவாரணத் தொகை கிடைத்துள்ளது. உழவர் அட்டையைப் பொறுத்தவரை கிராம நிர்வாக அலுவலர்கள் மூலம் விரைவில் சரிபார்க்கும் பணி தொடங்கவுள்ளது. தீவன விதைகள் விநியோகத்தில் உள்ள குழப்பம் சரிசெய்யப்படும்.

டெல்டா பகுதிகளுக்கான அனைத்து சலுகைகளும் இந்த மாவட்ட காவிரி பாசன பகுதி விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. நமது மாவட்டத்துக்கு என்னென்ன நிவாரணங்கள் கிடைக்கும் எனத் தெரியவில்லை. அதற்கான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பூதலூரில் பரவலாக மழை: விவசாயிகள் மகிழ்ச்சி

தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டி, பூதலூர் பகுதிகளில் வியாழக்கிழமை பரவலாக மழை பெய்தது.

செங்கிப்பட்டி, ஆச்சாம்பட்டி, பாலையப்பட்டி தெற்கு, பாலையப்பட்டி வடக்கு, புதுக்குடி, புதுப்பட்டி, பூதலூர்,

செல்லப்பன்பேட்டை, மருதகுடி, திருக்காட்டுப்பள்ளி பகுதிகளில் பரவலாக மழை பெய்துள்ளது.

மழையால், செங்கிப்பட்டி பகுதிகளில் நிலக்கடலை, சோளம், துவரை பயிர் செய்த விவசாயிகள் மகிழ்சியில் உள்ளனர்.

மேலும், செங்கிப்பட்டி முதல் ஆச்சாம்பட்டி வரை சுமார் 6 கி.மீ சாலை மிகவும் பழுதாக உள்ளது. சாலையில் தேங்கிய மழைநீரால் வாகன ஓட்டிகள் மிகவும் சிரமப்பட்டனர்.

## கருகிய நெற்பயிர்களுடன் ஆட்சியரை முற்றுகையிட்ட விவசாயிகள்

திருநெல்வேலியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், கருகிய நெற்பயிர்களுடன் ஆட்சியர் சி.சமயமூர்த்தியை விவசாயிகள் முற்றுகையிட்டனர். இந்த மாவட்டத்தில் கலப்பட உரம் விற்கப்படுவது குறித்தும் விவசாயிகள் பலர் புகார் தெரிவித்தனர்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்த குறைதீர் கூட்டத்தை தொடங்கி வைத்து ஆட்சியர் பேசினார். அடுத்த மாதம் முதல் கோட்ட அளவில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் மாதத்தில் 2-வது வெள்ளிக்கிழமைகளில் நடத்தப்படும். இந்தக் கூட்டங்களிலும் விவசாயிகள் பங்கேற்று பயன்பெறலாம். விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் அளிக்கப்படும் மனுக்களுக்கான ஒப்புகைச் சீட்டுகளை பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று ஆட்சியர் தெரிவித்தார்.

திருநெல்வேலி மாவட்டத்தையும் வறட்சி மாவட்டங்களின் பட்டியலில் சேர்த்த தமிழக அரசுக்கு விவசாயப் பிரதிநிதி கசமுத்து நன்றி தெரிவித்தார். மாவட்டத்தில் கார் பருவம், கார் மற்றும் பிசான பருவம், புஞ்சை பயிர்கள், கருகிய பயிர்கள் என்று 4 வகைகளில் பயிர்களுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார். இதற்கு பதில் அளித்த ஆட்சியர்

வறட்சி பாதித்த பகுதிகளை பார்வையிட குழு வருமுன் மாவட்டத்தில் விவசாயிகள் பங்கேற்கும் கூட்டம் நடத்தப்படும் என்றார்.

திருநெல்வேலி மாநகராட்சிக்கு உள்பட்ட பகுதிகளில் பாளையங்கால்வாய் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாகவும், பல இடங்களில் கழிவுகள் கொட்டப்பட்டிருப்பதாகவும் விவசாயப் பிரதிநிதி கணேசன் உள்ளிட்டோர் புகார் தெரிவித்தனர். தாமிரவருணி ஆற்றுப்படுகையில் ஆக்கிரமிப்புகள் குறித்தும் மாநகராட்சி நிர்வாகத்துக்குத் தெரிந்தே பல இடங்களில் கழிவறைகள் கட்டப்பட்டுள்ளது குறித்தும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

கடந்த கூட்டத்தின்போது அளித்த பல்வேறு மனுக்களுக்கும் கூட்டத்தில் பதில் தெரிவிக்காதது குறித்து விவசாயப் பிரதிநிதிகள் அதிருப்தி தெரிவித்ததால் கூட்டத்தில் சில நிமிடங்களுக்கு சலசலப்பு காணப்பட்டது. விவசாயம் சார்ந்த மனுக்களுக்கு மட்டுமே கூட்டத்தில் பதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், பிற துறைகள் சார்ந்த பதில்கள் அந்தந்த விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் ஆட்சியர் சமாதானம் செய்தார்.

முற்றுகை: பல்வேறு பகுதிகளில் இருந்து கருகிய நெற்பயிர்களுடன் வந்திருந்த விவசாயிகள் கூட்ட அரங்கில் இருந்தனர். அவர்கள் தங்கள் குறைகளைத் தெரிவிக்க வாய்ப்பு அளிக்கப்படும் என்று ஆட்சியர் தெரிவித்திருந்தார். இதனிடையே கூட்டம் முடியும் முன்னரே கருகிய நெற்பயிர்களுடன் சங்கரன்கோவில், சிவகிரி, ராயகிரி பகுதி விவசாயிகள் ஆட்சியர் இருக்கையைச் சூழ்ந்து முற்றுகையிட்டனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து அந்த விவசாயிகளிடமிருந்து கருகிய நெற்பயிர்களை ஆட்சியர் வாங்கினார். உரிய நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆட்சியர் அப்போது உறுதி தெரிவித்தார்.

கருகிய நெற்பயிர்களுடன் வந்திருந்த சங்கரன்கோவில் வட்டம் வீரசிகாமணி பகுதி உழவர் மன்ற அமைப்பாளர் மு.சண்முகசுந்தரம் கூறியது:

கருப்பாநதி அணைக்கட்டு பாசனத்துக்கு உள்பட்ட வீரசிகாமணி பெரியகுளத்தில் சாகுபடி செய்யப்பட்ட நெற்பயிரானது, அணைக்கட்டிலிருந்து தண்ணீர் வரத்து இல்லாததாலும், மழையின்மையாலும் விளையாமல் பதராகிவிட்டது. இதனால் விவசாயிகளுக்கு பெரிய அளவில் இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே அவர்கள் கவலையில் உள்ளனர். அவர்களுக்கு அரசின் நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆட்சியரிடம் கோரியுள்ளதாகத் தெரிவித்தார்.

கலப்பட உரம்: களக்காடு வட்டாரத்தில் கலப்பட உரம் விற்கப்படுவது குறித்து விவசாயப் பிரதிநிதி பி.பெரும்படையார் புகார் தெரிவித்தார். கலப்பட உரத்தின் சிறு பகுதியை எடுத்துவந்து

ஆட்சியரிடம் அவர் காண்பித்தார். இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் ஆட்சியர்.

அம்பாசமுத்திரம் வட்டம் பள்ளக்கால்புதுக்குடி பகுதியைச் சேர்ந்த கடனா காங்கேயன் நீரினை பயன்படுத்துவோர் சங்கத் தலைவர் பி.வேலாயுதம் வாடிய நெற்பயிர்களை ஆட்சியரிடம் காட்டினார். தங்களது பகுதியில் புதிய ரகம் என்று அறிமுகம் செய்து நடப்பட்ட நெற்பயிர்கள் அண்மையில் பெய்த மழையில் சாய்ந்து வீணாகிவிட்டதாகவும், இதனால் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

முன்னதாக கூட்டம் தொடங்கும் முன், விவசாயி குப்பக்குறிச்சியைச் சேர்ந்த சு.செல்லதுரை என்பவருக்கு களை எடுக்கும் கருவியை மானிய விலையில் ஆட்சியர் வழங்கினார். திருநெல்வேலி வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் சு.முத்துகுமாரசாமி உள்ளிட்ட அதிகாரிகள் உடனிருந்தனர்.

## தென்கிழக்கு அரபிக் கடலில் காற்றழுத்தத் தாழ்வு நிலை: வட தமிழகத்தில் மழை தொடரும்

தென்கிழக்கு அரபிக் கடலில் நிலை கொண்டுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக நாளை (பிப்.17) வட தமிழகத்தில் மழை நீடிக்கும் என வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

சில நாள்களுக்கு முன்பு அரபிக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை, லட்சத்தீவுகளுக்கும் ராஜஸ்தானுக்கும் இடையே நீடித்திருந்தது. அது தற்போது தென் கிழக்கு அரபிக் கடல் பகுதியில் நிலை கொண்டுள்ளது.குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை வலுவிழந்து வந்தாலும், தமிழகத்தில் இன்னும் 2 நாள்களுக்கு மழை நீடிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.வேலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், ஈரோடு, நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், கரூர், திருச்சி, அரியலூர், பெரம்பலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது. கடலோர மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் பலத்த மழை பெய்யலாம். தேனி, மதுரை, விருதுநகர், சிவகங்கை உள்பட மாநிலத்தின் பிற மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்யக்கூடும்.

சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மேட்டூர் அணையின் நீர்வரத்து 1,614 கன அடி

சேலம் மாவட்டத்தில் உள்ள மேட்டூர் அணைக்கு இன்று காலை நிலவரப்படி வினாடிக்கு 1,614 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது.

மேட்டூர் அணையில் தற்போது 29.8 அடிக்கு தண்ணீர் உள்ளது.அதன் முழு நீர் கொள்ளளவு 120 அடியாகும்.

கிருஷ்ணராஜ சாகர் அணையில் இருந்து 2 ஆயிரம் கன அடி நீரை கர்நாடகம் விடுவித்து 7 நாட்கள் ஆகும் நிலையில், இன்று காலை மேட்டூர் அணைக்கு காவிரியில் 1,614 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து வினாடிக்கு 480 கன அடி நீர் திறந்துவிடப்பட்டு வருகிறது.

### ஈரோட்டில் நாளை விவசாயிகள் மாநாடு

விவசாய நிலங்களில் எரிவாயுக் குழாய் பதிக்கும் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், ஈரோட்டில் ஞாயிற்றுக்கிழமை (நாளை) நடைபெறும் மாநாட்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலர் து.ராஜா உள்பட பல்வேறு கட்சிப் பிரமுகர்கள் பங்கேற்கின்றனர்.

ஈரோடு, திண்டல் அருகே ஏ.இ.டி. பள்ளி வளாகத்தில் இம்மாநாடு நடைபெறுகிறது. இம்மாநாட்டுக்கு அனைத்து விவசாய சங்கங்களின் ஒருங்கிணைப்பாளர் பி.காசியண்ணன் தலைமை வகிக்கிறார்.

மார்க்சிஸ்ட் கட்சி எம்.பி. பி.ஆர்.நடராஜன், முன்னாள் அமைச்சர்கள் என்கேகே. பெரியசாமி, சு.முத்துசாமி, மு.பெ.சாமிநாதன், பாஜக முன்னாள் மாநிலத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன், முன்னாள் எம்.எல்.ஏ. விடியல் எஸ்.சேகர், விவசாய சங்கத் தலைவர்கள் செ.நல்லசாமி, வழுக்குப்பாறை பாலு, கந்தசாமி உள்பட பலர் இதில் பங்கேற்கின்றனர்.

இம்மாநாட்டில் ஈரோடு, திருப்பூர், சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்க இருப்பதாக, விவசாய சங்க நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

### மேட்டூருக்கு வந்தது காவிரி நீர்



உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி, காவிரியில் கர்நாடக அரசு திறந்துவிட்ட தண்ணீர் மேட்டூர் அணைக்கு வெள்ளிக்கிழமை வந்து சேர்ந்தது.

மத்திய நிபுணர் குழு பரிந்துரைப்படி, தமிழகத்துக்கு 2.44 டிஎம்சி தண்ணீர் திறந்துவிடுமாறு கர்நாடகத்துக்கு கடந்த 7-ஆம் தேதி உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. அதன்படி, கடந்த சனிக்கிழமை கிருஷ்ணராஜசாகர் அணையிலிருந்து வினாடிக்கு 1,250 கன அடி தண்ணீரை கர்நாடகம் திறந்துவிட்டதாகக் கூறப்பட்டது.

ஆனால், இந்தத் தண்ணீரானது புதன்கிழமை இரவு வரை தமிழக எல்லைப் பகுதியான பிலிகுண்டுலுவுக்கு வந்து சேரவில்லை. இதனால், கர்நாடக அரசு தண்ணீர் திறந்துவிட்டது குறித்து பல்வேறு சந்தேகங்கள் ஏற்பட்டன.

இந்த நிலையில், மத்திய நீர்வள ஆணையம் காவிரி நீரை அளவிடும் தமிழக எல்லைப் பகுதியான பிலிகுண்டுலுவுக்கு வியாழக்கிழமை அதிகாலையிலிருந்து காவிரியில் நீர் வரத்து அதிகரிக்கத் தொடங்கியது. புதன்கிழமை இரவு வினாடிக்கு 700 கன அடியாக இருந்த நீர் வரத்து வியாழக்கிழமை காலை 8 மணியளவில் வினாடிக்கு 2,200 கன அடியாகவும், அன்று இரவு வினாடிக்கு 2 ஆயிரம் கன அடியாகவும் உயர்ந்தது.

ஒகேனக்கல்லிலிருந்து இந்தத் தண்ணீர் மேட்டூர் அணைக்கு வெள்ளிக்கிழமை காலை சென்றடைந்தது. இதையடுத்து, அணையின் நீர்மட்டம் மெல்ல, மெல்ல அதிகரிக்கத் தொடங்கியது.

கடந்த சில நாள்களாக மேட்டூர் அணைக்கு வினாடிக்கு 200 கன அடிக்கும் குறைவாக இருந்த நீர் வரத்து, வியாழக்கிழமை காலை 8 மணியளவில் வினாடிக்கு 127 கன அடியாகவும், வெள்ளிக்கிழமை காலை வினாடிக்கு 347 கன அடியாகவும் உயர்ந்தது. தற்போது, அணையின் நீர்மட்டம் 29.57 அடியாகவும், நீர் இருப்பு 7.35 டிஎம்சியாகவும் உள்ளது.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

16.02.2013 A.M

## மத்திய தொகுப்பு கோதுமை ஏற்றுமதிதனியாரையும் அனுமதிக்க அரசு திட்டம்



புதுடில்லி:மத்திய தொகுப்பில் தேங்கியுள்ள, கோதுமையை ஏற்றுமதி செய்ய, தனியார் வர்த்தகர்களையும் அனுமதிக்க, அரசு திட்டமிட்டுள்ளதாக, மத்திய உணவு அமைச்சர் கே.வி.தாமஸ் தெரிவித்தார்.இதுகுறித்து, அவர் மேலும் கூறியதாவது:

மத்திய அரசுக்கு சொந்தமான, இந்திய உணவு கழகத்தின் (எப்.சி.ஐ.,), சேமிப்பு கிடங்குகளில், கோதுமை கையிருப்பு அதிகரித்து, இட பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

**கையிருப்பு:**நடப்பு பிப்ரவரி மாதம், 1ம் தேதி நிலவரப்படி, எப்.சி.ஐ., கிடங்குகளில், கோதுமை கையிருப்பு, 3.08 கோடி டன்னாக உள்ளது.இந்நிலையில், நடப்பு 2012-13ம் பருவத்தில், நாட்டின் கோதுமை உற்பத்தி, 9.23 கோடி டன்னாக அதிகரிக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. வரும் ஏப்ரல் முதல், கோதுமை அறுவடை துவங்க உள்ள நிலையில், இதன் வரத்து அதிகரிக்கும். இது, மத்திய அரசு, கிடங்குகளில் மேலும் இட நெருக்கடியை ஏற்படுத்தும்.

**கிடங்குகள்:**எனவே, தற்போது, எப்.சி.ஐ., கிடங்குகளில் உள்ள கோதுமையை ஏற்றுமதி செய்ய, தனியார் வர்த்தகர்களுக்கும் அனுமதி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதனால், புதிதாக வரக்கூடிய கோதுமையை சேமித்து வைக்க, கிடங்குகளில் தாராளமாக இடம் கிடைக்கும்.இவ்வாறு தாமஸ் கூறினார்.

மத்திய அரசு, இதுவரையில், மத்திய தொகுப்பிலிருந்து, 45 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதி

செய்ய அனுமதி வழங்கியுள்ளது. இந்நிலையில், கூடுதலாக, 50 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதி öŒ#ய அனுமதி வழங்கப்படலாம் என, எதிர்பார்க்கப்படுகிறது. வெளிச் சந்தை கொள்முதல் மூலம், தனியார் வர்த்தகர்கள், இது வரையில், 20 லட்சம் டன் கோதுமையை ஏற்றுமதி செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

16.02.2013 A.M

---

## அமராவதி வாய்க்காலில் தண்ணீர் இல்லை 50 ஏக்கர் மஞ்சள் பயிர் கருகியது விவசாயிகள் கவலை

கரூர், : கரூர் அமராவதி வாய்க்கால் பாசனத்தில் தண்ணீரின்றி 50 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள மஞ்சள் பயிர் வாடுவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

கரூர் மாவட்டத்தில் அமராவதி அணை நீரை நம்பி 13,500 ஏக்கரில் பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. நெல், கரும்பு, மஞ்சள், வாழை பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வந்தது. கடந்த 3 மாதத்திற்கு முன் அமராவதி அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. தொடர்ந்து பாசனத்திற்கு தண்ணீர் வரும் என நம்பி வாய்க்கால் பாசன விவசாயிகள் பயிர் சாகுபடியில் ஈடுபட்டனர். அமராவதி வாய்க்காலில் பள்ளபாளையம் ராஜவாய்க்கால் மிகப்பெரிய வாய்க்காலாக உள்ளது. அணைப்பாளையத்தில் தொடங்கி பஞ்சமாதேவி வரை ராஜவாய்க்கால் செல்கிறது. தற்போது பாலம்மாள்புரம் வாய்க் கால் பகுதியும் இணைக்கப்பட்டிருக்கிறது. இதற்காக வாய்க்கால் தூர் வாரப்பட்டு இந்த வாய்க் கால் மூலமாக மட்டும் சுமார் 6 ஆயிரம் ஏக்கரில் பாசன வசதி பெறுகிறது. மேலும் கரூர் அருகே உள்ள செட்டிபாளையத்தில் அமராவதி ஆற்றின் குறுக்கே தடுப் பணை அமைக்கப்பட்டிருக்கிறது, இந்த தடுப்பணை மூலம் சுக்காலியூர், செல்லாண்டிபாளையம், கருப்பம்பாளையம் பகுதியில் உள்ள விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. அணை யில் இருந்து தண்ணீர் தற்போது திறக்கப்படாததால் அமராவதி ஆறு வறண்டு கிடக்கிறது. வாய்க்காலிலும் தண்ணீர் வராத தால் வறண்டு காணப்படுகிறது. அமரா வதி வாய்க்கால் பாசன பகுதிகளில் சுமார் 50 ஏக்கரில் மஞ்சள் பயிர் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. தொடர்ந்து தண்ணீர் வரும் என நம்பி மேற்கண்ட பகுதிகளில் பரவலாக மஞ்சள் பயிர்சாகுபடி செய்யபட் டது. தற்போது அறுவடை செய்யும் நிலையில் தண்ணீரின்றி மஞ்சள் பயிர்கள் வாடி வதங்குகின்றன. இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில்,

பொங்கல் பண்டிகைக்கு மஞ்சள் செடி பறிக்கப்பட்டு விற்பனை செய்தோம். கடந்த ஆண்டு இந்த காலகட்டத்தில் வாய்க்காலில் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. மழை ஓரளவு பெய்யும் என

எதிர்பார்த்தோம். ஆனால் மழை பெய்யாமல் ஏமாற்றி விட்டது. தற்போது அணை யில் நீர்மட்டம் மிகவும் கவலைக்குரியதாக இருக்கிறது. வாடும் பயிர்களுக்கு சிறிதளவேனும் தண்ணீர் விட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கிணற்றுப்பாசன பகுதிகளில் ஓரளவுக்கு சமாளித்து வருகின்றனர். கடந்த சில நாட்களாக மழை லேசான தூறல் மட்டுமே போடுகிறது. ஓரளவு மழைபெய்தாலே மஞ்சள் பயிரைக்காப்பாற்றி விடலாம். மஞ்சள் பயிரை காப்பாற்றுவதற்கு தேவையான தண்ணீரை திறந்துவிட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில் மஞ்சள் பயிரிட்டுள்ள விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்படும் என்றனர்.

## நிவாரண தொகை பெற டெல்டாவில் அரியலூர் வருகிறதா குறைதீர் கூட்டத்தில் விவசாயி கேள்வி

தா.பழூர், : நிவாரண தொகை பெற டெல்டா மாவட்டத்தில் அரியலூர் வருகிறதா என்று குறைதீர் கூட்டத்தில் விவசாயி கேள்வி எழுப்பினர்.

அரியலூர் டெல்டா பகுதி விவசாயிகளுக்கு பாதித்த நிலங்களுக்கு ஏக்கருக்கு ரூ.25,000 வழங்க வேண்டும் என்று விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

அரியலூர் கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நேற்று நடைபெற்றது. கலெக்டர் செந்தில்குமார் தலைமை வகித்தார். கூட்டத்தில் விவசாயிகள் பேசிய விவரம் வருமாறு, விவசாயிகள் சங்க மாவட்ட செய லாளர் உலகநாதன் பேசுகையில், டெல்டா மாவட்டங்களுக்கு ரூ.15,000 நிவாரண தொகையை அரசு அறிவித்துள்ளது. ஆனால் அரியலூர் டெல்டா பகுதிகளுக்கு உண்டா இல்லையா என்பது தெரியவில்லை. மேலும் அரியலூர் டெல்டா பகுதியில் எந்தெந்த பகுதிகள் உள்ளது என்பதே இதுவரையில் தெரியாமல் உள்ளது. இதனால் மாவட்ட விவசாயிகளுக்கு நிவாரண தொகை கிடைக்குமா என்ற கேள்விக்குறி எழுந்துள்ளது. மேலும் நிவாரண தொகையை ரூ.25,000 என உயர்த்த வேண்டும். தரிசாக கிடக்கும் விவசாய நிலங்களுக்கு ரூ.15,000 மற்றும் விவசாய கூலி தொழிலாளர்களுக்கு ரூ.10,000 வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கூட்டுறவு கடனை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றார்.

விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் செங்கமுத்து பேசுகையில், அரியலூர் அனைத்து பகுதிகளிலும் நெல் கொள்முதல் நிலையம் அமைத்து தர வேண்டும் என்றார்.

ஜெயச்சந்திரன் பேசுகை யில், ஜெயங்கொண்டம் உழவர் சந்தை யை இடமாற்றி செயல் பட வைக்க வேண்டும் என்றார்.

நாகரத்தினம் பேசுகை யில், பயிர் காப்பீட்டு திட்டத்தில் நிவாரண தொகை வழங்க தா.பழூர், திருமானூர் ஆகிய டெல்டா பகுதியையும் கவனத்தில் எடுத்து கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

கூட்டத்தில் மாநில அளவிலான மக்காச்சோளம் சாகுபடி பயிர் விளைச்சல் போட்டியில் முதலிடம் பிடித்த உலகநாதனுக்கு ரூ.7,500 காசோலை, 3ம் பரிசு பெற்ற பழனிவேலுக்கு ரூ.2500 காசோலை வழங்கினார். ஆண்டிமடம் சாமிதுரைக்கு ரூ.6,800 விசைத்தெளிப்பான், பூசாமணி என்ற விவசாயிக்கு ரூ.2,340 கைத்தெளிப்பான் மற்றும் பிற விவசாயிகளுக்கு ரூ.535 களைக்கொல்லி, ரூ.2340 களைக்கொல்லியை கலெக்டர் செந்தில்குமார் வழங்கினார்.

இதில் வேளாண்மை இணை இயக்குனர் குணசேகரன், துணை இயக்குனர் (பொ) சுப்பைய்யா, ஆர்டிஓ கணபதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ராகவேந்திரன், பிச்சைப்பிள்ளை, அம்பேத்கர்வலியன், மணி உள்ளிட்ட விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.